

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 01-03-2024

# சதிகளை வெல்லும் சாதுர்யங்கள் - 2

'சாதுர்யம் இருந்தால் சாதித்துக் கொள்ளலாம்' - என்று வழிகாட்டுகிறார் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். அவர் தனது கடமையை முதலில் செய்து விட்டு அடுத்தவருக்கு அறிவுரை வழங்கட்டும்.

மெட்ரோ ரயில் திட்டத்துக்கு வாக்குறுதி கொடுத்த நிதியை ஒன்றிய அரசு தரவில்லை. அதற்கான காரணத்தை அவரால் சொல்ல முடியவில்லை. மெட்ரோ ரயில் இரண்டாம் திட்டங்களில் ஒன்றிய அரசு முட்டுக்கட்டை போட்டு வருகிறது. அந்தத் திட்டத்தின் நிதி ஒதுக்கீடு என்பது ஒன்றிய அரசும், மாநில அரசும் 50 : 50 விழுக்காடு பங்கிட்டுத் தர வேண்டும். மெட்ரோ இரண்டாம் கட்டப் பணி என்பது ரூ.63 ஆயிரம் கோடி செலவாகும். பா.ஜ.க. அரசு இதற்குப் பணம் ஒதுக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை வைத்து கடிதம் மேல் கடிதம் அனுப்பி விட்டார். அதற்கு இது வரை ஒப்புதல் வரவில்லை. மாநில அரசு செலவு செய்வதற்கான நிதியைத் திரட்ட பன்னாட்டு கடனுதவி பெறுவதற்கும் அனுமதி தரவில்லை. மாநில அரசு இந்த ஆண்டு ரூ.9 ஆயிரம் கோடியை ஒதுக்கி இருக்கிறது. ஒன்றிய நிதி வரவில்லை என்றால் இந்தத் திட்டத்தை முழுமையாக மாநில அரசின் நிதியில் இருந்துதான் செயல்படுத்த வேண்டும். ஆண்டுக்கு ரூ.12 ஆயிரம் கோடியை இதற்காக ஒதுக்கினால்தான் மெட்ரோ இரண்டாம் கட்ட திட்டத்தை செயல்படுத்தி முடிக்க முடியும். நிதித்துறையை கையில் வைத்திருக்கும் நிர்மலா சீதாராமன் இதற்குப் பதில் சொல்லி இருக்க வேண்டும்.

ஜி.எஸ்.டி. வரி இழப்பீடு நிறுத்தப்பட்டதால் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டுக்கு ரூ.20 ஆயிரம் கோடி நிதி இழப்பு ஏற்பட்டதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இது பற்றிக் கேட்டால், 'சட்டத்தில் இடமில்லை' என்கிறார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். ஐந்து ஆண்டுகள் தான் இழப்பீடு தருவதாக சட்டத்தில் இருக்கிறதாம். அந்தச் சட்டத்தை யார் போட்டது? இதே பா.ஜ.க. தான்.

ஜி.எஸ்.டி. வரி விதிப்பால் மாநிலங்கள் பாதிப்பு அடைகின்றன என்பதை உணர்ந்துதானே இழப்பீடு கொடுக்க ஒப்புக் கொண்டீர்கள். அப்படியானால் அந்த இழப்பீட்டை தொடர்ந்து கொடுப்பதுதானே சரியானதாக இருக்கும். 'சட்டம் இடமளிக்கவில்லை' என்று சொல்லும் அமைச்சர், அந்தச் சட்டத்தை மாற்றலாமே!

தமிழ்நாடு ஒரு ரூபாய் கொடுத்தால், 29 பைசா தான் திருப்பித் தரப்படுகிறது என்பது நமது குற்றச்சாட்டு. அது தொடர்பாக அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் நிருபர் கேட்கிறார். புள்ளிவிபரப் புலியான அமைச்சர் தன்னிடம் இருக்கும் கோப்புகளை வைத்து இதனை மறுத்திருக்க வேண்டும். '1 ரூபாய் வாங்கிவிட்டு, அதைவிட அதிகமாகத் தருகிறோம்' என்பதை நிரூபித்துச் சொல்லி இருக்க வேண்டும். ஆனால் பொத்தாம் பொதுவாக, 'தமிழகத்திற்கு அதனிடம் கிடைக்கும் வருவாயை விட அதிகமாகத் தான் கொடுத்திருக்கிறோம்' என்று பதில் சொல்கிறார். அதிகமாகக் கொடுத்திருக்கிறோம் என்றால் எவ்வளவு? அது அமைச்சருக்குத் தெரியாதா? கேட்டுச் சொல்ல வேண்டியதுதானே?

ஜி.எஸ்.டி. இழப்பீடாக 2017 இல் ரூ.632 கோடியும், 2018 இல் ரூ.3,151 கோடியும், 2019 இல் ரூ.8,922 கோடியும், 2020 இல் ரூ.11,141 கோடியும், 2021இல் ரூ.6,696 கோடியும், 2022இல் ரூ.16,214 கோடியும், 2023 இல் ரூ.3,532 கோடியும் தந்ததாகப் புள்ளி விபரம் சொல்லும் ஒன்றிய அமைச்சர் தமிழ்நாடு ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு பணம் கொடுத்துள்ளது என்பதை ஏன் சொல்லவில்லை?

**"மாநிலங்களின் நிதி உரிமையை - வலிமையைப் பறிப்பது என்பது அதன் ஆக்ஸிஜனை நிறுத்துவது ஆகும். அதனைத் தான் பா.ஜ.க. அரசு செய்து வருகிறது" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வது தானே முழு உண்மை.**

மாநில அரசுகளின் நிதி நிர்வாகத்தில் ஒன்றிய அரசு தலையிடுவதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளது கேரள மாநில அரசு.

அதற்கு தமிழ்நாடு அரசும் முழு ஒத்துழைப்பை வழங்கும் என்று மாண்புமிகு பினராயி விஜயனுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் கடிதம் எழுதி இருந்தார். இதே கோரிக்கையை முன் வைத்து கர்நாடக முதலமைச்சர் சித்தராமையாவும், கேரள முதலமைச்சர் பினராயி விஜயனும் டெல்லிக்குப் போய் போராட்டமே நடத்தி இருக்கிறார்கள்.

ஒன்றிய அரசு தரவேண்டிய நிதியை தர மறுப்பதால்தான் கடன் வாங்க வேண்டிய சூழல் மாநில அரசுக்கு இருக்கிறது. ஆனால், மாநிலங்கள் கடன் வாங்குவதில் கூட தடையை ஏற்படுத்துகிறார்கள். மாநிலங்களின் பொதுச் செலவினங்களுக்கு நிதியளிப்பதற்கான பொதுக் கடன் என்பது, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, மாநில சட்டமன்றத்தின் தனிப்பட்ட அதிகார வரம்பிற்கு உட்பட்டது ஆகும். மாநிலங்கள் கடன் வாங்குவதற்கான வாய்ப்புகளைக் கட்டுப்படுத்த, இந்திய அரசமைப்பின் 293-வது பிரிவின் கீழ் தனக்குள்ள அதிகாரத்தை ஒன்றிய அரசு தவறாகப் பயன்படுத்தி வருகிறது. இந்தப் பிரிவின்படி, மாநிலங்கள் கடன் வாங்க ஒன்றிய அரசிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்பதே மாநில சுயாட்சிக்கு எதிரானது ஆகும். 'மாநில சுயாட்சி' என்றால் கிலோ என்ன விலை என்று கேட்பவர் அவர். அவருக்கெல்லாம் அரசியல் மாண்புகள் தெரியாது. புரியாது.

**தொலைக்காட்சிகளிலும், நாளிதழ்களிலும் பேட்டிகளை நிர்மலா சீதாராமன் வாரி வழங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் அவர் தமிழ்நாட்டில் போட்டியிடப் போவதாகத் தெரிகிறது. தமிழ்நாட்டு மக்கள் அவருக்குப் புரியும் மொழியில் நிச்சயம் பதில் சொல்வார்கள்.**

●●



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.2.2024 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் 7 கோடியே 85 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தமிழறிஞர் டாக்டர் மு.வரதராசனார் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய குவிமாட அரங்கம், தியாகி அண்ணல் தங்கோ அவர்களுக்கு திருவுருவச் சிலை, இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவு மண்டபம், பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் மணிமண்டபம், சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் மணிமண்டபம் மற்றும் எம்.கே.தியாகராஜ பாகவதர் மணிமண்டபம், வீரன் சுந்தரலிங்கம் மணிமண்டபத்தில் குதிரையில் அமர்ந்து போர்புரிவது போன்று கம்பீர தோற்றத்துடன் கூடிய புதிய சிலை ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் முனைவர் இல. சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் டாக்டர் இரா.வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் (28.02.2024) முகாம் அலுவலகத்தில், மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவர குறிப்பு மைய அலுவலகத்திற்கு, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட 10 உதவி புவியியலாளர்கள் பணியிடத்திற்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது, நீர்வளத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா மற்றும் துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில்

# ரூ.558.45 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, மார்ச் 01-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.02.2024 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில் 558 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னை தீவுதிடலில் இயற்கை வனப்புடன் கூடிய நவீன நகர்ப்புர பொது சதுக்கம், மாமல்லபுரத்தில் புதிய பேருந்து நிலையம், கிளாம்பாக்கத்தில் புதிய நடை மேம்பாலம், புதிய பள்ளி வளாகம் கட்டுதல், மேம்பாலங்களின் கீழ் அழகுபடுத்துதல், விளையாட்டு மைதானத்தை புனரமைத்தல், மிதி வண்டி மற்றும் நடைபாதை அமைத்தல், கடற்கரை மற்றும் குளங்களை மேம்படுத்துதல் ஆகிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.**

சென்னைப் பெருநகரப் பகுதியின் வளர்ச்சியை ஒழுங்குபடுத்துவதற்கு விரிவான திட்டமிடல் தேவை என்பதை உணர்ந்து 1972ல் மெட்ராஸ் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் என்ற பெயரில் தற்காலிக அமைப்பாக இருந்து, பின்னர் 1975ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971ன் கீழ் சட்டப்பூர்வ குழுமமாக மாற்றப்பட்டது. சென்னைப் பெருநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்கால தேவைகளைக் கருதி பெருகிவரும் மக்கள் தொகைகேற்ப கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், அரசின் நகர்ப்புற மேம்பாடு மற்றும் பெருநகரத் திட்டமிடல் தொடர்பான கொள்கை முடிவுகளை செயல்படுத்துதல், முழுமைத் திட்டம் மற்றும் விரிவான வளர்ச்சித் திட்டங்களை அமல்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் செயல்படுத்தி வருகிறது.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

அந்த வகையில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 104 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை தீவுதிடலில் இயற்கை வனப்புடன் கூடிய நவீன நகர்ப்புர பொது சதுக்கம், கண்காட்சி அரங்குகள், திறந்தவெளி திரையரங்கம், உணவகங்கள் போன்ற நவீன நகர்ப்புர வசதிகளை கொண்ட கட்டடம்;

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் 90 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய பேருந்து நிலையம்; செங்கல்பட்டு மாவட்டம் கிளாம்பாக்கத்தில் 74 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கிளாம்பாக்கம் புதிய ரயில் நிலையத்தை கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்துடன் இணைக்கும் வகையில் புதிய நடை மேம்பாலம் அமைக்கும் பணி;

சென்னை, திருவொற்றியூரில் 41 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடற்கரையை மேம்படுத்தும் பணிகள்; சென்னை, தண்டையார் பேட்டை பேருந்து நிலையத்தை 26 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கும் பணி; சென்னை, கிழக்கு கடற்கரை சாலை, ஈஞ்சம்பாக்கத்தில் 23 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மிதி வண்டி பாதை மற்றும் நடைபாதை அமைக்கும் பணி;

சென்னை ஆலந்தூரில் 18 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய சமுதாயக் கூடம் கட்டும் பணி; சென்னை, கிழக்கு கடற்கரை சாலை, அக்கரையில் 16 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மிதி வண்டி பாதை மற்றும் நடைபாதை அமைக்கும் பணி; திருவள்ளூர் மாவட்டம், புழல், மகாலட்சுமி நகரில் 14 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாநகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு புதிய பள்ளி வளாகம் கட்டும் பணி;

சென்னையில், இரட்டை ஏரி, வில்லிவாக்கம், பாடி மற்றும் வடபழனி ஆகிய இடங்களில் 14 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாலங்களின் கீழ் அழகுப்படுத்தும் பணி; சென்னை வெளிவட்ட சாலையான மீஞ்சூர், வெள்ளனூர், குன்றத்தூர் மற்றும் வரதராஜபுரத்தில் 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4 உடற்பயிற்சி பூங்காக்களை மேம்படுத்தும் பணி;

சென்னை, எண்ணூரில் 13 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தினசரி காய்கறி சந்தை மற்றும் சமுதாயக் கூடம் புதுப்பிக்கும் பணி; சென்னை, கவியரசு கண்ணதாசன் நகரில் 13 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பேருந்து நிலையத்தை மேம்படுத்தும் பணி; சென்னை, புரசைவாக்கம், கான்ரான் ஸ்மித் சாலையில் 12 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சலவைக் கூடத்தை மேம்படுத்தும் பணி;

சென்னை, ஷெனாய் நகர், மாநகராட்சி விளையாட்டு மைதானத்தை 10 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; திருவள்ளூர் மாவட்டம், அன்னனூர், கோணம்பேடு அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டும் பணி; சென்னை, பெரும்பாக்கத்தில் 8 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பூங்காவை மேம்படுத்தும் பணி;

சென்னை, கோட்டூரில் 8 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாநகராட்சி விளையாட்டுத் திடலை மேம்படுத்தும் பணி; திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி - ஆவடி நெடுஞ்சாலையில் 7 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த விளையாட்டு அரங்கம் கட்டும் பணி; சென்னை, ராமாபுரத்தில் 7 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பூங்காவை மேம்படுத்தும் பணி;

சென்னை, பெரம்பூர், முல்லைநகர் பேருந்து நிலையத்தை 6 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; செங்கல்பட்டு மாவட்டம், பம்மல், ஈஸ்வரி நகரில் 5 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விளையாட்டுத் திடல் மற்றும் பூங்கா அமைக்கும் பணி; சென்னை, கோடம்பாக்கம், புலியூர் கால்வாய் கரையை 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அழகுபடுத்தும் பணி;

காஞ்சிபுரம் மாவட்டம், முடிச்சூர் ஊராட்சியில் இரங்கா நகர் குளத்தை 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; சென்னை, தியாகராய நகர் சோமசுந்தரம் விளையாட்டு மைதானத்தை 3 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி; திருவள்ளூர் மாவட்டம், புழல், மேட்டுப்பாளையம், சீனிவாசன் தெருவில் 3 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கால்பந்து மைதானத்தை புனரமைக்கும் பணி;

**என மொத்தம் 558 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் சி. சமயமூர்த்தி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக சென்னை, தீவுத்திடலிலிருந்து சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே மற்றும் அரசு உயர் அலுவலர்களும், செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி, சார் ஆட்சியர் நாராயண சர்மா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.



சென்னை, கிண்டி, போக்குவரத்து ஆணையரகத்தில், நேற்று முன்தினம் (28.02.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், போக்குவரத்துத் துறை சார்பில் 41.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையரக புதிய கட்டடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திரரெட்டி, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு துறை ஆணையர் அ.சண்முகசுந்தரம், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.